



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 364 26.06.2026 FRIDAY AANI : 12 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 364 26.06.2026 வெள்ளிக்கிழமை ஆனி : 12 விலை : ரூ.5/-


## 300 பேருந்துகள் சேவை தொடங்கி வைப்பு

# "அரசுப் பேருந்தில் முதல்வர் விஜய்!"

சென்னை: ஜூன்.26-

தமிழக முதல்வர் விஜய் நேற்று சென்னை மாநகரப் பேருந்தில் தலைமைச் செயலகம் முதல் கலங்கரை விளக்கம் வரை பயணித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 300 அரசுப் பேருந்துகளின் சேவையை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்.

சென்னை, கோவை உள்ளிட்ட 6 கோட்டங்களுக்காக 164 டீசல் பேருந்துகள், 136 சிஎன்ஜி பேருந்துகள் உள்பட 300 புதிய பேருந்துகள் தமிழக அரசால் வாங்கப்பட்டிருந்தன.

இந்தப் பேருந்துகளின் தொடக்க விழா இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. பேருந்துகளின் சேவையை முதல்வர் விஜய் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, திருவல்லிக்கேணி பெரம்பூர் வழித்தடத்தில் செல்லும் 29 ஏ புதிய மாநகரப் பேருந்தில் முதல்வர் விஜய் பயணித்தார்.

தலைமைச் செயலகத்தில் இருந்து கலங்கரை விளக்கம் வரை அந்தப் பேருந்தில் பயணித்த முதல்வர் விஜய், ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு வாழ்த்து தெரிவித்தார். பேருந்துக்குள் அவர் புகைப்படம், வீடியோ எடுத்துக் கொண்டார். அந்தக் காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

முதல்வருடன் போக்குவரத்து துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன் மற்றும் உயர் அதிகாரிகள் இருந்தனர்.

முதல்வரால் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்ட புதிய



பேருந்துகள் கிளாம்பாக்கம் மற்றும் கோயம்பேடு பேருந்து முனையங்களிலிருந்தும், மாநகர் போக்குவரத்து பேருந்துகள் தொடர்புடைய பேருந்து நிலையங்களிலிருந்தும் போக்குவரத்து சேவையை உடனடியாக தொடங்கின.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், "தமிழ்நாடு அரசு, 8 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக, கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், வணிகம், சமூக மற்றும் பிற தேவைகளுக்காக மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகங்களின் 26 மண்டலங்கள் மற்றும் 317 பணிமனைகளின் வாயிலாக இயக்கப்படும் சுமார் 21,527 பேருந்துகளின் மூலம் தினசரி சுமார் 2.05 கோடி பயணிகள் பயணம் செய்து வருகின்றனர். இதில் சுமார் 64 சதவீதம் பேர் மகளிர், மாணவர்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், கலைமாமணி விருதாளர்கள், பிற தகுதிவாய்ந்த பயனாளிகள் கட்டணமில்லா பயணச் சலுகையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல், முன்பு நிறுத்தப்பட்ட பகுதிகளில் மீண்டும் பேருந்து சேவைகளை இயக்குதல், பழைய பேருந்துகளை மாற்றுதல், பணிமனைகள் மற்றும் பயணிகள் வசதிகளை மேம்படுத்துதல், வாகனங்களின் தகுதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல், தொழில்நுட்ப அடிப்படையிலான பயணிகளின் சேவைகளை விரிவுபடுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதல்வர் தலைமையில் 17.06.2026 அன்று நடைபெற்ற போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தின்போது, போக்குவரத்துத் துறையை சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாசற்ற, நவீன, தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய, பாதுகாப்பான மற்றும் பயணிகள் பயன்பெறும் வகையிலான பொதுப் போக்குவரத்து அமைப்பாக மேம்படுத்த வேண்டும் என்றும், ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான முறையின் மூலம் டிஜிட்டல் கட்டண வசூல், GPS / Vehicle Location Tracking, பயணிகள் தகவல் அமைப்புகள், பேருந்து நிலையங்களில் 24ஜ்7 பயணிகள் உதவி மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதன்படி, பொதுப் போக்குவரத்து சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 65 பேருந்துகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் விழுப்புரம் கோட்டத்திற்கு 36 பேருந்துகள், சேலம் கோட்டத்திற்கு 39 பேருந்துகள், கோயம்புத்தூர் கோட்டத்திற்கு 25 பேருந்துகள், கும்பகோணம் கோட்டத்திற்கு 49 பேருந்துகள், மதுரை கோட்டத்திற்கு 42 பேருந்துகள் மற்றும் திருநெல்வேலி கோட்டத்திற்கு 44 பேருந்துகள் என மொத்தம் 300 புதிய பேருந்துகளின் சேவையை தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இப்பேருந்துகளில் 164 டீசல் பேருந்துகளும், ஙிஷி கூஷிமி இணக்கமான, குறைந்த மாசு உமிழ்வு கொண்ட சுற்றுச்சூழலுக்கு ஏற்ற 136 சிழிநி பேருந்துகளும் அடங்கும். இப்புதிய பேருந்துகள் நகர மற்றும் புறநகர் பேருந்து சேவைகளை வலுப்படுத்தி, பயணிகளுக்கான தொடர் சேவையை மேம்படுத்தி, பயணிகள் காத்திருப்பு நேரத்தைக் குறைத்து, பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்திற்கு வகைசெய்யும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "எனது அணுகுமுறை தவறாக புரிந்து கொள்கிற நிலைமை ஏற்பட்டதற்காக வருந்துகிறேன்; அமைச்சர் விஸ்வநாதன்

சென்னை, ஜூன்.26-

தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் வெளியிட்ட அறிக்கையில், "மதுரையில் போதைப் பொருட்கள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் குற்றங்களுக்கான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் மாணவ மாணவிகள் பங்கேற்று 4 கி.மீ. தூரம் சென்றதால் கடும் வெயிலின் காரணமாக சிலர் மயக்கமடைந்தனர்.

அவர்களுக்கு நான் செய்த முதலுதவி ஊடகங்களில் தவறான நோக்கத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் தகப்பன் என்கிற முறையில் மனிதாபிமான உணர்வோடு நான் செய்த உதவிகள் தவறாக சித்தரிக்கப்படுவது மிகுந்த வேதனையளிக்கிறது.

இப்பிரச்சினையில் எனது செயலுக்கு உள்நோக்கம் கற்பிப்பது மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. ஏதோ ஒருவகையில் எனது அணுகுமுறை தவறாக புரிந்து கொள்கிற நிலைமை ஏற்பட்டதற்காக எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

மதுரை மேலூர் தொகுதியின் எம்எல்ஏவும், தமிழக உயர் கல்வித்துறை அமைச்சருமான விஸ்வநாதன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்யக்கோரி, சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் சரண்யாநடராஜன் என்பவர், தமிழக டிஜிபி, சிங்கப்பெண் படை அதிகாரி, மற்றும் தமிழக சைபர்க்ரைம் மற்றும் தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்த நிலையில், அமைச்சர் வருத்தம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். முன்னதாக அவர் விளக்க அறிக்கை ஒன்றையும் நேற்று வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

முதலுதவி செய்ததாக விளக்கம்

உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மதுரை மேலூரில் புகையிலை, மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் குற்றங்களுக்கு எதிராக விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது.

இதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் 4 கி.மீ. தூரம் பங்கேற்றதால் கடும் வெயிலின் காரணமாக சிலர் மயக்கமடைந்து கீழே விழுந்தனர்.

அந்த சிறுமிகளை மனிதாபிமான உணர்வோடு தொட்டுத்தூக்கி மயக்கத்தை போக்கும் வகையில் தண்ணீரை தெளித்து முதலுதவி செய்தேன்.

இதற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில், திமுக ஐ.டி. விங்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பதிவு செய்திருப்பது மிகவும் அநாகரீகமான செயல்" என்று கூறியுள்ளார்.

## அமைச்சர் ஆனந்துடன் திடீர் சந்திப்பு

## த.வெ.க.,வில் இணைகிறார் சி.விஜயபாஸ்கர்?

சென்னை, ஜூன்.26-

அதிமுகவிலிருந்து விலகிய சி. விஜயபாஸ்கர், அமைச்சர் என். ஆனந்தை திடீரென நேரில் சந்தித்து பேசிய நிலையில், வரும் திங்கட்கிழமை அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



2026 சட்டமன்ற தேர்தலில் 108 தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் ஐ.யூ.எம்.எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்திருக்கிறது. ஆளும் கட்சியாக இருந்த திமுக இந்த தேர்தலில் 2ஆம் இடம் பெற்று எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறது. ஆனால் கடந்த முறை எதிர்க்கட்சியாக இருந்த அதிமுக 47 இடங்களை மட்டுமே கைப்பற்றி 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது.

தொடர் தோல்விகளை சந்தித்து வருவதால் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது அக்கட்சியினர் கடும் அதிருப்தியில் உள்ளனர். இதனால், கட்சிக்குள்ளேயே அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி முதலமைச்சர் விஜய்க்கு, ஆளுநர் அறிவுறுத்தி இருந்த போது, சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி தலைமையிலான 25 பேர் கொண்ட அணி, வெளிப்படையாகவே தங்கள் ஆதரவை விஜய்க்கு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமாரவேல், பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் சத்யபாமா, அம்பா சமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா ஆகிய 4 பேர் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்து விட்டு தவெகவில் இணைந்தனர்.

இதனால், கட்சித் தாவல் தடை சட்டத்தை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கையில் எடுத்த நிலையில், அதிருப்தி அணியில் இருந்த எஸ்.பி. வேலுமணி தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்கள் சமாதானத்திற்கு வந்தனர். ஆனால், சி.வி.சண்முகம், சி. விஜய பாஸ்கர் ஆகிய இருவர் மட்டும் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதை தவிர்த்து வந்தனர்.

கடந்த 16 ஆம் தேதி சி. விஜயபாஸ்கர் தனது விராலிமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார். இதனால் சட்டமன்றத்தில் 47ஆக இருந்த அதிமுகவின் பலம் 42 ஆக குறைந்துள்ளது. சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்த விஜயபாஸ்கர், தவெகவில் இணைய உள்ளார் என தகவல் பரவி வந்த நிலையில் அவர் தொடர்ந்து அமைதி காத்து வந்தார்.

இந்நிலையில் விஜய பாஸ்கர், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள தவெக பொதுச் செயலாளரும், அமைச்சருமான என். ஆனந்த் இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து பேசியுள்ளார். இதனைத் தொடர்ந்து வரும் திங்கட்கிழமை அவர் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக முதலமைச்சர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ பதவியை ராஜிநாமா செய்த நிலையில் தமிழகத்தில் தற்போது 6 சட்டமன்ற தொகுதிகள் காலியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ரூ.2.47 லட்சம் கோடி கடனில் மின் வாரியம் வெள்ளை அறிக்கை வெளியீடு

சென்னை: ஜூன்.26-

"தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு தற்போது ரூ.2.47 லட்சம் கோடி கடன் உள்ளது. இருப்பினும் இந்த ஆண்டு மின் கட்டணத்தை உயர்த்தப் போவதில்லை" என்று வெள்ளை அறிக்கையை வெளியிட்டுப் பேசிய அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

சென்னை மின் வாரிய தலைமை அலுவலகத்தில் மின்சார வாரியத்தின் நிதி, செலவினங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை அமைச்சர் நிர்மல்குமார் இன்று வெளியிட்டார்.




பின்னர், இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மின்கட்டணம் உயர்த்தப்படும்போது அதே அளவுக்கு செலவினங்களும் உயர்த்தப்படுகிறது. செலவினங்கள் அதிகரிக்கிறதே தவிர கட்டமைப்புகள் பலப்படுத்தப்படவில்லை. புதிய பணியாளர் தேர்வும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், 20212026 வரை மின்வாரிய செலவு ரூ.5.32 லட்சம் கோடியாகவும், மின்வாரிய வருமானம் ரூ.4.97 லட்சம் கோடியாகவும் உள்ளது. தற்போது மின் வாரியத்தின் பற்றாக்குறை ரூ.34,447 கோடியாக உள்ளது.

தமிழகத்தில் மொத்தமாக 1,40,635 மின் ஊழியர்களின் தேவை இருக்கிறது. தற்போது 74,174 ஊழியர்கள் தான் பணியில் இருக்கிறார்கள்.

அதோடு, மின் துறையில் 65,921 காலிப் பணியிடங்கள் உள்ளன. 16,782 பேர் அடுத்த 5 ஆண்டுகளில் ஓய்வு பெற உள்ளனர். இதை சரி செய்வதில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த ஆண்டு புதிதாக 20,449 பேர் நியமிக்கப்படுவார்கள். ஊழியர்கள் பற்றாக்குறை இருந்தாலும், மக்களுக்கு சிக்கல் இல்லாமல் சேவை செய்கிறோம்.

திமுக ஆட்சிக்காலத்தில் 343 பேர் மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஊழியர்களின் எண்ணிக்கை 2 மடங்கு உயர்ந்திருக்க வேண்டும். வளர்ச்சியை நோக்கி எந்த ஒரு திட்டமும் துவங்கப்படவில்லை.

மின் வாரியத்தில் குறுகிய கால கான்ட்ராக்ட் மூலம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்படுகிறது. அதை நீண்ட கால கான்ட்ராக்டாக மாற்றுவதன் மூலம் விலையை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மாதம் 215 கோடி ரூபாய் சேமிக்கப்படும்.

தமிழகத்தில் தற்போது 4,47,603 ட்ரான்ஸ்பார்மர்கள் உள்ளன. 1,910 துணை மின் நிலையங்கள் உள்ளன. புதிதாக 231 துணை மின்நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

மின்துறைக்கு மொத்தமாக ரூ.2.47 லட்சம் கோடி கடன் உள்ளது. மின்வாரிய வரலாற்றிலேயே கடந்த ஆட்சிக்காலத்தில் தான் அதிக வருவாய் ஈட்டப்பட்டு, அதேநேரம் அதிக செலவிடல் நடந்திருக்கிறது.

அதேநேரம் 20212026 ஆம் ஆண்டில், மின்வாரியத்தின் கடன் ரூ.87.399 கோடி ஆகும். இவ்வளவு வரவு இருந்து, செலவும் செய்து, கடனும் வாங்கி உள்கட்டமைப்புகள் பெரிதாக மேம்படுத்தப்படவில்லை.

2021 முதல் உப்பூர் அனல்மின் நிலையம் திட்டம் தொடர்ந்து கிடப்பில் கிடக்கிறது. ஒப்பந்த தொழிலாளர் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் துறை செயல்பாடுகள் இனி வெளிப்படை தன்மையுடன் இருக்கும். மின்வாரியத்தை மீட்டெடுக்க வேண்டும். தற்போது கடன் வாங்காமல் நிலைமையை சமாளிக்க முடியாது.

இந்த ஆண்டு மின்கட்டணத்தை உயர்த்தப் போவதில்லை. அனைத்து நுகர்வோர்களுக்கும் மின் கட்டணம் உயர்வு இல்லை. தமிழகத்தின் மின்சேமிப்பு திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். திமுக 50 ஆண்டுகளாக விஞ்ஞான ஊழல் செய்தனர். அதையும் கண்டுபிடிப்போம்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்த வெள்ளை அறிக்கையின் சாராம்சம் என்னவென்றால் கடந்த காலங்களில் மக்களும் கஷ்டத்தில் இருந்தார்கள், தொழில் துறையும் கஷ்டத்தில் தான் இருந்தது, மின் துறையும் கஷ்டத்தில் இருந்தது. யார் பலனடைந்தார்கள் எனத் தெரியவில்லை. அதைத்தான் எல்லா பக்கமும் தேடிக் கொண்டிருக்கிறோம். எல்லாமே செலவினமாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் செய்த செலவுக்கு ஏற்ப எந்த கட்டமைப்பும் மேம்படுத்தப்படவில்லை.

டிரான்ஸ்ஃபார்மர் மட்டுமல்லாமல் மின் கண்டெக்டர் கொள்முதலிலும் முறைகேடு நடந்துள்ளது. 9 இடங்களில் மின் கண்டெக்டர் கொள்முதல் செய்ததில் முறைகேடு நடந்துள்ளது.

முதல்வர் விஜய் தலைமையில் ஆட்சியமையவில்லை என்றால் மின்வாரியம் தனியார்மயமாகியிருக்கும். மின் வாரியத்தை மேம்படுத்த வேண்டிய பணிகளில் ஈடுபடுவோம்." என்றார்.

# தவெக ஆட்சி அமைப்பதற்காக பாஜகவின் ஆதரவை ஒருபோதும் நாடியதில்லை

## நயினார் நாகேந்திரனுக்கு அமைச்சர் செங்கோட்டையன் பதில்

கோவை, ஜூன்.26-

தவெக ஆட்சி அமைக்க பாஜகவின் ஆதரவை நாடவில்லை என கோவையில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: முதல்வர் விஜய் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளையும் முழுமையாக கேட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச வேண்டும். சட்டப்பேரவையை விட்டு வெளியே போய் கருத்து சொல்லாமல், உள்ளே இருந்து



கருத்து சொன்னால் அதற்கான பதில் எதிர்க்கட்சித் தலைவருக்கு கிடைத்திருக்கும்.திமுக கருத்துகளை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால்தான், மக்கள் நிராகரித்துள்ளனர். முதல்வர் விஜய் பிறந்த நாளன்று பள்ளி மாணவர்கள் கட்சிக்கொடி ஏந்தியதற்கு நாங்கள் பொறுப்பல்ல. சட்டப்பேரவைக்குள் 2 முறை தேசிய கீதம் இசைக்கப்பட்டதில் எந்த தவறும் இல்லை.தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க பாஜக தலைவர்களை நாடியதாக நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். பாஜக ஆதரவை தவெக என்றைக்கும் கேட்கவில்லை. நயினார் நாகேந்திரன் காமெடியாக பேசிக்கொண்டிருக்கிறார். நாங்கள் தவறு செய்யமாட்டோம், தவறு செய்யவிட மாட்டோம் என முதல்வர் சொல்லி உள்ளார். எனவே, கோடநாடு எஸ்டேட்டில் நடந்த கொலை, கொள்ளை உள்பட அனைத்து விவகாரங்களிலும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழகத்தில் 28ம் தேதி 14 மாவட்டங்களில் கனமழை

சென்னை, ஜூன்.26-

தமிழகத்தில் ஜூன் 28ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (ஜூன் 25) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், 26, 27 தேதிகளில் தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட தமிழகத்தின் உள் பகுதிகளில் ஓரிரு இடங்களும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும். 28ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 29, 30 தேதிகளில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



தமிழகத்தில் 27ம் தேதி கோவை மற்றும் தேனி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி மாவட்டத்திலும், 28ம் தேதி திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 29ம் தேதி கோவை, தேனி மாவட்ட மலைப்பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.


தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்றும், நாளையும் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் 4 செமீ, நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரத்தில் 3 செமீ, பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை கிஸிநி (பெரம்பலூர்) 2, சென்னை ஆட்சியர் அலுவலகம் (சென்னை), பெரம்பலூர் (பெரம்பலூர்), பெரம்பூர் (சென்னை), வேப்பந்தட்டையில் 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 3 ஆண்டுக்கு முந்தைய வழக்கில் தற்போது நடவடிக்கை ஏன்? செந்தில் பாலாஜி சகோதரர் வழக்கில் நீதிபதி கேள்வி

மதுரை, ஜூன்.26-

கரூரில் 3 ஆண்டுகளுக்கு முன்பு வருமானவரித் துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் மீது தற்போது நடவடிக்கை எடுப்பது ஏன் என உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.கரூரைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமார் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனு: கரூரில் கடந்த 2023 மே 26ல் எங்கள் அலுவலகத்தில் வருமானவரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது அங்கு வந்த திமுகவினர் வருமானவரித் துறை அதிகாரிகளைப் பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும், தவறான வார்த்தைகளால் திட்டியதாகவும், அதிகாரிகளின் மடிக்கணினி மற்றும் 5 பென் டிரைவ்களை பறித்துச் சென்றதாகவும் கூறி வருமானவரித் துறை உதவி இயக்குநர் கிருஷ்ணகாந்த் போலீஸில் புகார் அளித்தார். இப்புகாரின்பேரில் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில்



என்னையும் போலீஸார் சேர்த்துள்ளனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அரசியல் முன்விரோதம் காரணமாக என்னையும் வழக்கில் சேர்த்துள்ளனர். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறேன். எனவே, வழக்கில் கைதாகாமல் இருக்க முன் ஜாமீன் வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி தனபால் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், 2023 ல் சம்பவம் நடைபெற்ற போது மனுதாரர் அங்கு இல்லை. பிரச்சினை செய்யத் தூண்டியதாகவே மனுதாரர் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் முன் ஜாமீன் வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டது. அரசுத் தரப்பில், பதில் மனுத் தாக்கல் செய்ய கூடுதல் அவகாசம் கோரப்பட்டது.அதற்கு நீதிபதி, இந்த வழக்கு 3 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் போலீஸார் தற்போது தீவிரம் காட்டுவது ஏன், கொலை வழக்குகளிலேயே மறுநாள் பதில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவகாசம் கோருவது ஏன் எனக் கூறி விசாரணையை இன்றைக்கு தள்ளி வைத்தார்.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் வருமான வரித்துறை அதிகாரிகள் தாக்கப்பட்ட வழக்கை கரூர் டவுன் போலீஸார் மீண்டும் விசாரணையை தொடங்கி உள்ளனர். இந்தச் சம்பவம் குறித்த விசாரணைக்காக அசோக்குமாரைத் தேடி கரூர் போலீஸார் சென்னைக்கு வந்து சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தனியார் பொறியியல் கல்லூரிகளில் அதிகப்படியான நன்கொடை வசூலால் பெற்றோர் தவிப்பு

சென்னை, ஜூன்.26-

தமிழகத்தில் பொறியியல் படிப்புகளுக்கான ஆர்வம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. புதுப்புது தொழில்நுட்பங்கள், பல்வேறு வகையான பாடப் பிரிவுகள், கல்லூரிகளில் நடத்தப்படும் வளாக நேர்காணல்களில் மாணவ, மாணவியருக்கு உயர் சம்பள தொகுப்பு, ஐடி துறையில் அதிக வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த ஆர்வம் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களிடம் அதிகளவில் காணப்படுகிறது.

பொறியியல் கல்லூரிகளை பொறுத்தவரை சென்னை மற்றும் கோவை பகுதி கல்லூரிகள் மாணவர் சேர்க்கையில் அதிகளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 400க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை கலந்தாய்வு மூலம் சேர்க்கை நடைபெறுகிறது. பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் பெற்றோர் பலரும், தங்களது குழந்தைகளை



தனியார் பொறியியல் கல்லூரியில் சேர்க்க முயன்று வருகின்றனர். அதே நேரம், தனியார் கல்லூரிகளில் அதிகளவில் நன்கொடை வசூலிப்பதாக தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அவர்கள் கூறியதாவது: குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, குழந்தைகளின் விருப்பமான பொறியியல் கல்லூரிகளில் சேர்க்க நினைக்கிறோம். கலந்தாய்வில் கட் ஆப் மதிப்பெண்ணுக்கு இடம் கிடைக்குமா என்ற சந்தேகத்தில், தனியார் கல்லூரிகளை நாடுகிறோம்.

பல்வேறு கல்லூரிகளிலும் ஆண்டு கல்வி கட்டணம் ரூ. 1.25 லட்சம் தொடங்கி ரூ. 2.50 லட்சம் வரை வசூலிக்கப்படுகிறது. இது படிப்புக்கேற்ப மாறுபடும். கல்லூரிகளின் ரேங்கிற்கு ஏற்ப, நன்கொடையானது வசூலிக்கப்படுகிறது.

ஒரு மாணவர் தனது விருப்பப் பாடத்தை சொல்லி கேட்டால், அதில் கூடுதல் சான்று படிப்பு ஏ.ஐ., சைபர் செக்யூரிட்டி உள்ளிட்ட இணை படிப்புகளாக சொல்லித்தரப்படுவதாக அதிக கட்டணம் கேட்கிறார்கள்.கல்லூரி நிலை, படிப்பை அவர்கள் சொல்லித்தரும் விதம், எதிர்கால வேலைவாய்ப்பு, கட்டணம் உள்ளிட்டவற்றை கணக்கில் கொண்டு தான் பொறியியல் படிப்புக்கு சேர்க்கிறோம். ஆனால் பெற்றோரை அச்சுறுத்தும் வகையில் நன்கொடை உள்ளது. முதலாம் ஆண்டில் ஒரு மாணவர் நன்கொடையுடன் சேர வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ரூ.3 லட்சம் தொடங்கி அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை ஆகிறது. வேலைவாய்ப்புக்கு பல கல்லூரிகளும் உறுதி அளிக்கின்றன.

மாணவர்கள் பலரும் குறைந்த ஊதியத்தில் வேலைக்கு சேர்வதை பார்க்கிறோம். கல்லூரியில் படித்து வேலைக்கு தேர்வானவர்களின் ஆண்டு ஊதியம் ரூ.20 லட்சத்தை கடந்தவர்களின் புகைப்படங்களை போட்டு தனியார் கல்லூரிகளில் பதாகைகள் வைத்து விளம்பரம் செய்யப்படுகிறது.கட்டணம் ஒருபக்கம் என்றால் விடுதிக்கட்டணமும் பல மடங்காக இருக்கிறது. ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.80 ஆயிரம் தொடங்கி ரூ.1.30 லட்சம் வரை தர வாரியாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

சில கல்லூரிகளை பார்க்கும்போது வளாகத்துக்குள் பாதுகாப்பற்ற சூழல் காணப்படுகிறது. ஆனாலும் கட்டணம் அதிகளவில் இருக்கிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி கூறும்போது, "தனியார் பொறியியல் கல்லூரிகள் நன்கொடை என்ற பெயரில் லட்சக்கணக்கில் பணம் பெறுகின்றன.

பல்வேறு கல்லூரிகளிலும் பெற்றோர்களின் செல்போன்களை கூட கல்லூரிக்குள் அனுமதிப்பதில்லை. அவர்கள் விசாரிப்பதற்கான இடத்தில் செல்போன்கள், ஸ்மார்ட் வாட்ச்கள் என எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை.நான் பணியில் இருந்தபோது பல கல்லூரிகள் தரம் இன்றி இருந்ததால் மூடி உள்ளேன். அரசாங்கம் தான் தனியார் பொறியியல் கல்லூரிகளின் நன் கொடை மற்றும் கட்டணங்களை முறைப்படுத்த வேண்டும். தனியார் கல்லூரிகள் அறக்கட்டளை நிதி என்ற பெயரில் நன்கொடையை வாரிக் குவிக்கின்றன. அரசாங்கத்தின் உயர்கல்வித்துறை நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, நன்கொடை மற்றும் அதிகப்படியான கல்விக்கட்டணத்துக்கு கடிவாளமிட முடியும்" என்றார்



# சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த நடவடிக்கை: அமைச்சர் அருண்ராஜ் தகவல்

சென்னை, ஜூன்.26-

சென்னை, திருச்சி, கோவை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

சென்னை தேனாம்பேட்டையில் சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் தலைமையில் உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று நடந்தது. கூட்டம் முடிவில், அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அசைவ உணவு விடுதிகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பான முறையில் உணவு தயாரிப்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, சேலம், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் சோதனை முறையில் தெருக்களில் 'ஆரோக்கியமான சுகாதாரமான உணவு' திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த 5 மாவட்டங்களில் சாலையோர உணவு விற்பனையை முறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.தெருக்களில் உணவு கடை நடத்துபவர்கள் தரமான சுகாதாரமான உணவு தர வேண்டும் என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், உணவக பணியாளர்களுக்கு டைபாய்டு தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். யூடிபூர்கள் 'ஃபுட் ரிவ்யூ' குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். குழந்தைகளுக்கான தங்க மோதிரம் திட்டம் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிரசவம் அதிகரிக்கும். திருவள்ளூர் மாவட்டத்தில் அமோனியா வாயு கசிவு தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வாயு கசிவால் இறந்தவர்களின் உடல்கள் அரசு செலவில் சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.மருத்துவமனைகளில் பணியாற்றும் பணியாளர்கள், பணம் வாங்கினால், 104 என்ற எண்ணில் புகார் அளிக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஜூன் 30ல் சென்னை நாகர்கோவில் வந்தே பாரத் ரயில் சேவையில் மாற்றம்

சென்னை, ஜூன்.26-

திருநெல்வேலி யார்டில் மறுசீரமைப்பு பணி காரணமாக, சென்னை எழும்பூர் நாகர்கோவில் வந்தே பாரத் ரயில் சேவையில் வரும் 30ம் தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



இதன்படி, சென்னை எழும்பூர் நாகர்கோவிலுக்கு வரும் 30ம் தேதி அதிகாலை 5 மணிக்கு புறப்பட வேண்டிய வந்தே பாரத் ரயில் (20627), 45 நிமிடங்கள் தாமதமாக அதிகாலை 5.45 மணிக்கு புறப்பட்டு செல்லும்.நாகர்கோவில் சென்னை எழும்பூருக்கு அன்று பிற்பகல் 2.20 மணிக்கு புறப்பட வேண்டிய வந்தே பாரத் ரயில் (20628), ஒரு மணி நேரம் 10 நிமிடங்கள் தாமதமாக பிற்பகல் 3.30 மணிக்கு புறப்பட்டு செல்லும்.

திருச்சி திருவனந்தபுரம் சென்ட்ரலுக்கு வரும் 30ம் தேதி காலை 7.15 மணிக்கு புறப்படும் அதிவிரைவு ரயில் (22627) விருதுநகர், ராஜபாளையம், தென்காசி, கொல்லம் வழியாக திருப்பி விடப்படும். இந்த ரயில் சாத்தூர், கோவில்பட்டி, திருநெல்வேலி, வள்ளியூர், நாகர்கோவில் டவுன், குழித்துறை வழியாக இயக்கப்படாது. கூடுதல் நிறுத்தமாக, தென்காசி, செங்கோட்டை, புனலூர், கொல்லம் ஆகிய நிலையங்களில் நின்று செல்லும். இத்தகவல், தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துறையூர் அருகே நெல் மூட்டைகள் தேக்கம் விவசாயிகள் வேதனை

திருச்சி, ஜூன்.26-

துறையூர் அருகே கண்ணனூர் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் செய்யவில்லை என விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். நெல் மூட்டைகளை கொண்டு வந்து 10 நாட்களாகியும் இதுவரை கொள்முதல் செய்யவில்லை என விவசாயிகள் புகார் அளித்துள்ளனர்

# தைலாபுரத்தில் ராமதாஸை சந்தித்தார் அன்புமணி

விழுப்புரம், ஜூன்.26-

பாமகவில் ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வந்த தந்தை மகன் அதிகாரப் பகிர்வு பிரச்சினை ராமதாஸ் திருமண நாளில் முடிவுக்கு வந்தது. பாமக தலைவர் அன்புமணியும், நிறுவனர் ராமதாஸும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி கண்ணீர் சிந்தினர்.பாமக நிறுவனர் ராமதாஸுக்கும் அதன் தலைவர் அன்புமணிக்கும் இடையிலான பிரச்சினையால் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் இருதரப்பும் தனித்தனியாக செயல்பட்டனர். ராமதாஸின் மிகக் கடுமையான விமர்சனத்தையும் மீறி சவுமியா அன்புமணி உள்பட 4 பாமக எம்எல்ஏக்கள் வெற்றி பெற்றனர். தேர்தலுக்கு பிறகு அன்புமணியின் கை ஓங்கியது. தைலாபுரத்துக்கு வருவதை பாமகவினர் குறைத்



துக் கொண்டனர். யாரையும் சந்திக்காமல் பொது பிரச்சினைகளுக்காக சில அறிக்கைகளை மட்டும் ராமதாஸ் வெளியிட்டு வந்தார்.இதற்கிடையில் தந்தை, மகனை இணைக்க குடும்ப உறவுகளும், முக்கிய நபர்களும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினர். இதற்காக ராமதாஸின் திருமண நாள் சரியானதாக இருக்கும் என நாள் குறிக்கப்பட்டது. அதன்பேரில் ராமதாஸ் சரஸ்வதி இணையரின் 61வது திருமண நாளையொட்டி அவர்களிடம் ஆசி பெறுவதற்காக அன்புமணி, அவரது மனைவி சவுமியா, மகள்கள் சம்யுக்தா, சங்கமித்ரா, சஞ்சுத்ரா, இரு மருமகன்கள், பேரப்பிள்ளைகள் என அனைவரும் நேற்று தைலாபுரத்துக்கு வருகை தந்தனர்.ராமதாஸ் தரப்பினர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்றனர். ஒன்றரை ஆண்டுகளாக மகனை சந்திப்பதை தவிர்த்து வந்த ராமதாஸ் நேற்று மகனை கண்டதும் கட்டித் தழுவினார். இருவரும் கண்ணீர் சிந்தினர். தாயையும் அன்புமணி அரவணைத்தார். மேலும் பேரப் பிள்ளைகள் மற்றும் கொள்ளு பேரப் பிள்ளைகளையும் கொஞ்சி மகிழ்ந்தார். அப்போது அன்புமணி, சவுமியா உள்ளிட்ட அனைவரும் அவர்களது காலில் விழுந்து ஆசிபெற்றனர். பின்னர் ஒன்றாக அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டனர்.

பின்னர் அன்புமணி செய்தியாளர்களிடம் கூறும்போது, "அப்பா அம்மாவின் 61வது திருமண நாள். இதனால் குடும்பத்துடன் சென்று வாழ்த்துகளையும், ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டோம். இனி நல்லது நடக்கும்" என்றார். ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வந்த மோதல் முடிவுக்கு வந்தது பாமகவினரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது.

ஸ்ரீகாந்தி அதிருப்தி

ராமதாஸை அன்புமணி குடும்பத்துடன் வந்து சந்தித்தபோது அவரது இளைய சகோதரி கவிதா உடன் இருந்தார். ஆனால், மூத்த மகளும் பாமக செயல் தலைவருமான ஸ்ரீகாந்தி, அவரது மகன் முகுந்தன் உள்ளிட்டோர் புறக்கணித்தனர். தலைவர் பதவியை தன்வசப்படுத்திக் கொண்டதாக அறிவித்த ராமதாஸ், அன்புமணிக்கு வழங்கிய செயல் தலைவர் பதவியை மூத்த மகள் ஸ்ரீகாந்திக்கு கொடுத்தார். தந்தை மகன் ஒன்றாக இணைந்தாலும் குடும்பத்தில் உள்ள பிரச்சினை நீருபூத்த நெருப்பாக புகைந்து கொண்டே இருக்கிறது. பாமக செயல் தலைவர் பதவியில் ஸ்ரீகாந்தி இருப்பதால் கட்சியிலும் புகைச்சல் தொடரும் என கருதப்படுகிறது.

## அரசு திரைப்படக் கல்லூரி படிப்பு: விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு





சென்னை, ஜூன்.26-
அரசு திரைப்படக் கல்லூரியில் டிஜிட்டல் இன்டர்மீடியட், ஆடியோகிராபி ஆகிய இரு படிப்புகளுக்கு மட்டும் ஆன்லைன் விண்ணப்ப பதிவு ஜூன் 27ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது: தமிழக அரசின் எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் சென்னை தரமணியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் ஒளிப்பதிவு, டிஜிட்டல் இன்டர்மீடியட், ஒலிப்பதிவு, இயக்கம் மற்றும் திரைக்கதை எழுதுதல், எடிட்டிங், அனிமேஷன் மற்றும் விஷுவல் எஃபெக்ட்ஸ் ஆகிய 6 பாடங்களில் இளங்கலை பட்டப் படிப்பு (பேச்சிலர் ஆஃப் விஷுவல் ஆர்ட்ஸ்) வழங்கப்படுகிறது.நடப்பு கல்வி ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு ஜூன் 21ம் தேதி முடிவடைந்தது. இந்நிலையில், டிஜிட்டல் இன்டர்மீடியட், ஒலிப்பதிவு (ஆடியோகிராபி) ஆகிய இரண்டு பாடப்பிரிவுகளுக்கு மட்டும் நிர்வாக காரணங்களுக்காக, ஆன்லைன் விண்ணப்ப பதிவு ஜூன் 27ம் தேதி மாலை 5 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.எனவே, மேற்கண்ட பாடப்பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்கும் முயற்சியை கைவிட தவாக வலியுறுத்தல்



சென்னை, ஜூன்.26-
மாநகராட்சி தூய்மைப் பணிகளைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு கைவிட்டு, நேரடியாக அரசே இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.
இது குறித்து, அவர் வெளியிட்ட அறிக்கையில் "தமிழகத்தில் உள்ள 12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணிகளை பொதுதனியார் பங்களிப்பு (PPP) முறையில் மேற்கொள்ள தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
இதற்காக விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தாம்பரம், ஆவடி, ஓசூர், வேலூர், கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 12 மாநகராட்சிகளில் இத்திட்டத்தின் மூலம் தனியார் நிறுவனங்களின் நவீன இயந்திரங்கள் மற்றும் மேலாண்மைத் திறனை பயன்படுத்தி நகரங்களின் சுகாதாரத்தை உலகத் தரத்துக்கு உயர்த்துவதாகும். சென்னையைத் தொடர்ந்து மற்ற நகரங்களிலும் தூய்மைப் பணிகளை மேம்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஏற்கெனவே, சென்னை மாநகராட்சியில் குப்பை மேலாண்மை பணிகள் தனியாருக்கு வழங்கப்பட்டபோது, ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி பாதுகாப்பு மற்றும் ஊதியக் குறைப்பு உள்ளிட்ட காரணங்களால் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். தற்போது 12 மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் புதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தூய்மைப் பணியை ஒப்பந்தம் எடுக்கும் நிறுவனங்கள், தொழிலாளர்கள் மற்றும் வாகனங்களை மட்டும் தங்கள் பங்களிப்பாக கொண்டு, மாநகராட்சியின் பணிமனை, வார்டு அலுவலகங்கள், குப்பை கொட்டும் இடங்கள் உள்ளிட்ட அரசு உள்கட்டமைப்புகளையே பயன்படுத்துகின்றன.
எனவே, இப்பணியை அரசே நேரடியாக மேற்கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டி, தேர்தலுக்கு முன்பு தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்த தவெக அரசு, தனது வாக்குறுதிக்கு ஏற்ப செயல்பட்டு, தூய்மைப் பணிகளைத் தனியாருக்கு ஒப்படைக்கும் முயற்சியை கைவிட வேண்டும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.
மேலும், எல் நினோ காலநிலை மாற்றத்தால், தமிழகத்தில் 12 மாவட்டங்களில் வறட்சி ஏற்படலாம். எனவே, விவசாயிகளுக்கு குறுகிய கால மாற்றுப் பயிர் சாகுபடி குறித்து வேளாண்மைத் துறை விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்" என்று வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

## இருமொழிக் கொள்கையை விட்டுக்கொடுக்காமல் மத்திய அரசிடம் நிதி பெறுவோம்: அமைச்சர் ராஜ்மோகன் உறுதி



பெரம்பலூர், ஜூன்.26-
இருமொழிக் கொள்கையை விட்டுக்கொடுத்து தான் மத்திய அரசிடம் நிதி பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதேசமயம், மத்திய அரசிடம் இருந்து நிதியை பெறாமல் விடமாட்டோம் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.
பெரம்பலூர் மாவட்டத்தில் 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் 100 சதவீத தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில், ஆட்சியர் ஷரண்யா அறி, எஸ்.பி. லலித்குமார், எம்எல்ஏ சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியது: இருமொழிக் கொள்கையை விட்டுக்கொடுத்துதான் மத்திய அரசிடம் நிதி பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை. அதேசமயம் மத்திய அரசின் நிதியையும் பெறாமல் விடமாட்டோம். முந்தைய ஆட்சியில் கல்வித் துறையில் ஊழல் பெருகி இருந்தது. தற்போது, தவெக ஆட்சியில் நடத்திய ஆய்வில் ஒவ்வொரு துறையாக ஊழல் வெளிவந்துகொண்டிருக்கிறது. பள்ளிக் கல்வித் துறையிலும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்குப் பிறகு ஊழல் விவகாரம் வெளிச்சத்துக்கு வரும். இவ்வாறு அவர் கூறினார்.

## "கரூரை போல பெரியபாளையம் புறக்கணிப்பா?" விஜய்க்கு நயினார் கண்டனம்

சென்னை, ஜூன்.26-
"சினிமாக்காரர்களை தினசரி சந்தித்து சிரித்துப் பேசி மகிழும் உங்களுக்கு, உங்கள் ஆட்சியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்ல நேரமில்லையா அல்லது மனமில்லையா?," என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கரூரை கைகழுவி விட்டது போல, பெரியபாளையத்தையும் புறக்கணிக்கிறீர்களா முதல்வர் விஜய் அவர்களே? திருவள்ளூர் பெரியபாளையம் தொழிற்சாலையில் அமோனியா வாயு தாக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்து தமிழகத்தையே சோகக்கடலில் ஆழ்த்தியுள்ள நிலையில், உயிரிழந்தோரின் குடும்பத்தாரை இதுவரை நேரில் சென்று சந்திக்காத உங்கள் ஆணவமும் அலட்சியமும் கடும் அதிர்ச்சியளிக்கிறது.
சினிமாக்காரர்களை தினசரி சந்தித்து சிரித்து பேசி மகிழும் உங்களுக்கு, உங்கள் ஆட்சியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்ல நேரமில்லையா அல்லது மனமில்லையா? ஒரு வேளை பாதிக்கப்பட்டவர்கள் பனையூருக்கு வந்தால் தான் உங்கள் ஆறுதல் வார்த்தைகள் கிடைக்குமோ? பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை விட்டெறிந்து விட்டால் நமது கடமை முடிந்து விட்டது என அவர்களை சந்திக்காமல் நீங்கள் ஓரம் கட்டுவது என்ன விதமான மனநிலை? இதுமட்டுமா? சீரழிந்த சட்டம் ஒழுங்கு, கேள்விக்குறியாகியுள்ள பெண்களின் பாதுகாப்பு, பெருகிவரும் போதைப் பழக்கம், தவெகவினரின் அராஜகங்கள் என உங்கள் ஆட்சியில் நடக்கும் எந்த பிரச்சினையையும் நீங்கள் கண்டு கொள்வதில்லை என்பதற்கு, ஒரே நாளில் (23/06/2026) மட்டும் 10 பாலியல் வன்கொடுமைகள் நடந்துள்ள கொடுமையே சாட்சி. இப்படி எதைப்பற்றியும் கவலைப்படாமல், அடுத்த 'நீரோ' மன்னன் போல முதல்வர் பதவியில் அமர்ந்துள்ள உங்களின் உண்மை முகம் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்கத் துவங்கிவிட்டது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தாக்குதல் வழக்கை ரத்து செய்யக் கோரிய சேகர் பாபு மனு வாபஸ்: வழக்கு தள்ளுபடி

சென்னை, ஜூன்.26-
வாக்குப் பதிவு நாளன்று, துறைமுகம் தொகுதி தவெக வேட்பாளர், கட்சியினரை தாக்கியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி முன்னாள் அமைச்சர் சேகர்பாபு தாக்கல் செய்த மனு திரும்பப் பெறப்பட்டதை அடுத்து, வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவு நாளான கடந்த ஏப்ரல் 23ம் தேதி, சென்னை துறைமுகம் தொகுதி தவெக வேட்பாளர் சினோரா அசோக், தேர்தல் பணிமனையில் இருந்தபோது, அங்கு வந்த முன்னாள் அமைச்சர் சேகர் பாபு மற்றும் திமுகவினர், தவெக வேட்பாளரையும், தவெக தொண்டர்களையும் தாக்கியதாக புகார் அளிக்கப்பட்டது.
இந்த புகாரின் அடிப்படையில், தனக்கு எதிராக வடக்கு கடற்கரை போலீஸார் பதிவு செய்துள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி திமுக எம்எல்ஏவும், முன்னாள் அமைச்சருமான சேகர் பாபு மனுத் தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்த போது, சேகர் பாபு தரப்பில், சம்பவம் நடந்து 29 நாட்களுக்கு பின், புதிய அரசு பொறுப்பேற்ற பின் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரில் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் வழக்கை ரத்து செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.
இந்த வாதங்களை ஏற்க மறுத்த நீதிபதி, வழக்கை ரத்து செய்ய எந்த முகாந்திரமும் இல்லை எனக் கூறி, சேகர் பாபுவின் மனுவை தள்ளுபடி செய்வதாகவும், விரிவான உத்தரவு பின்னர் பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.பின்னர், சேகர் பாபு தரப்பில் மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மனுவை வாபஸ் பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்

## நூலக பாடவேளைகளில் வாசிப்பு இயக்க செயல்பாடுகள்: தொடக்கக் கல்வித் துறை உத்தரவு



சென்னை, ஜூன்.26-
அரசுப் பள்ளிகளில் நூலகப் பாடவேளைகளில் வாசிப்பு இயக்க செயல்பாடுகளை நடப்பு கல்வியாண்டிலும் அமல்படுத்த வேண்டுமென தொடக்கக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.
இதுகுறித்து தொடக்கக் கல்வித் துறை இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: பள்ளிக் குழந்தைகளிடம் உரையாடலை தொடங்கவும், இயல்பாக உரையாடவும் வாசிப்புதான் வாசலாக அமையும். வாசிப்பின் வாயிலாக சமூக சிந்தனையை தூண்டவும், உளப்பாடுகளை வெளிக்கொண்டு வரவும் மாபெரும் வாசிப்பு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.261 புத்தகங்கள் இதன் அடிப்படையில் வாசிப்பு இயக்கத்துக்கான கதைப் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற என்ற வகையில் முதல்கட்டமாக 53 புத்தகங்கள், 2ம் கட்டமாக 70, 3ம் கட்டமாக 81 மற்றும் 4ம் கட்டமாக 57 என மொத்தம் 261 புத்தகங்கள் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.இதையடுத்து இந்த வாசிப்பு இயக்கப் புத்தகங்களை நடப்பு கல்வியாண்டிலும் (2026 27) பள்ளி நூலகப் பாடவேளைகளில் மாணவர்கள் முழுமையாக வாசித்துப் பயன்பெறும் வகையிலும் மாணவர்களை கதைச் சொல்லிகளாகவும், எழுத்தாளர்களாகவும் உருவாக்கும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இதுகுறித்து தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்கள் வாயிலாக அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



■ தமிழக வெற்றிக் கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப்விஜய், பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள கொழிஞ்சிப்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா கலந்து கொண்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கிறப்புரையாற்றினார்.இதில் தவெக ஒன்றிய செயலாளர்கள் விஜய்ஹரிஷ்,கிருஷ்ணமூர்த்தி,தாமு,வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்தி, இணைச் செயலாளர் ராமநாதன், முத்து,உள்பட பலர் கலந்து கொண்டனர். கிளை செயலாளர் தர்மராஜா இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார்.நிகழ்ச்சியின் முடிவில் வலையப்பட்டி கிளை நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.



## நாடு முழுவதும் ஜூன் 28ம் தேதி போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்

சென்னை, ஜூன்.26-
நாடு முழுவதும் வரும் ஜூன் 28, 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு பள்ளிகளில் மற்றும் ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது



■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் படைப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, கலந்துரையாடினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி.கிரண் ஸ்ருதி இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.சாந்த குமார், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திருமதி.உமாமகேஸ்வரி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராம்குமார் உட்பட பலர் உள்ளனர்.

## "இனி கூட்டணி இல்லை; தனித்தே போட்டி என ஸ்டாலின் அறிவிக்க வேண்டும்" ஆ.ராசா



திருவாரூர், ஜூன்.26-
"தயவு செய்து இனி யாரோடும் கூட்டணி இல்லை, திமுக தனித்தே போட்டியிடும் என திமுக தலைவர் அறிவிக்க வேண்டும். 234 தொகுதிகளிலும் தனித்து நிற்போம். தமிழ்நாட்டை காப்பாற்ற வேண்டுமெனில் வேறு வழியில்லை" என திமுக எம்.பி ஆ.ராசா தெரிவித்தார்.திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் மதிவாணன் இல்லத் திருமண விழாவில் பேசிய ஆ.ராசா, "காமராஜரை தோற்கடித்த விருதுநகர் பெ.சீனிவாசன், அண்ணாவும், ராஜாஜியும் எவ்வளவு பெரிய அறிஞர்கள் என்பதை குறிப்பிடும்போது, "நான் காமராஜரை தோற்கடித்துவிட்டேன், காமராஜரை தோற்கடித்ததற்கு ஒரு பாராட்டு விழா உள்ளது வருகிறீர்களா?" என்று கேட்டாராம். அதற்கு அண்ணா, "வின்செண்ட் சர்ச்சிலையும், ரூல்ஸ் வெல்டையும் தெரியுமா என்றார். இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்தை மட்டுமல்ல ஐரோப்பியாவை மட்டுமல்ல, இந்த உலகத்தை காப்பாற்றியதில் வின்செண்ட் சர்ச்சிலுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு, அந்த வின்செண்ட் சர்ச்சில் போருக்கு பிறகு பொது தேர்தலில் தோற்றுப் போனார். வெற்றி பெற்ற இங்கிலாந்து பிரதமரிடம் வின்செண்ட் சர்ச்சிலையே தோற்கடித்து விட்டீர்களே என்று கேட்டனர் அதற்கு அவர், உலக தலைவராக இருக்கின்ற வின்செண்ட் சர்ச்சிலை ஒரு தோல்வி பாதிக்காது" என்று கூறினாராம்.ராஜாஜியிடம் கேட்டபோது, மகாத்மாவையே இரண்டு இன்ச் உயரம் உள்ள தோட்டா தான் தொலைத்தது. அதற்காக அந்த தோட்டாவுக்கு பாராட்டு விழா நடத்த முடியுமா?" என்று கூறினாராம்.அத்தகைய அண்ணாவும், ராஜாஜியும் இருந்த சட்டப்பேரவையில், இன்று யார் யாரோ உள்ளனர். இந்தத் தலைவனை (ஸ்டாலினை) ஒரு தேர்தலை வைத்து எடை போட முடியுமா? இந்த மேடையில் உள்ள முத்தரசன் மன்னிக்க வேண்டும். இன்னொரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் 'திமுக கூட்டணியே இல்லை' என்கிறார். அதைச் சொல்ல அவர் யார்?. அவருக்கு என்ன அதிகாரம் உள்ளது? எங்கள் கட்சி திமுக கூட்டணியில் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். அவருடைய பேச்சு அதிகப்பிரசங்கித்தனம். எங்களது கூட்டணியில் 60 இயக்கங்கள் உள்ளன. நேற்று சென்னையில் இருந்து வந்தோம். 'மீண்டு வருவோம்' எனத் தொண்டர்களும், 'தலைவா நாங்கள் இருக்கிறோம்' என தாய்மார்களும், 'தலைவரே உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள் தமிழ்நாடு உங்களை நம்பித் தான் இருக்கிறது' என்றெல்லாம் மக்கள் கூறுகிறார்கள்.
இன்னொருவர் பொதுக்குழுவை கூட்டி ஆலோசிக்கிறோம் என்கிறார். அவரது மொத்த கட்சியையே கூட்டினால் கலைஞர் அரங்கத்துக்குள்ளே கூட்டி விடலாம். அவரெல்லாம் பேசுகிறார். தயவு செய்து இனி கூட்டணி யாரோடும் இல்லை, திமுக தனித்தே போட்டியிடும் என திமுக தலைவர் அறிவிக்க வேண்டும். 234 தொகுதிகளிலும் தனித்து நிற்போம். தமிழ்நாட்டை காப்பாற்ற வேண்டுமெனில் வேறு வழியில்லை. பெரியார், அண்ணா, கலைஞரின் மொத்த உருவமாக உங்களைப் பார்க்கிறோம்" என்றார்.

# “ஆங்கிலேயர் காலத்து வரலாற்றுச் சிறப்புமிக்க சர்வே கோபுரம் உடைப்பு!” ராதாபுரம் ஜமாபந்தியில் பரபரப்புப் புகார்!



திசையன்விளை, ஜூன்.26-
திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தாலுகாவிற்கான ஜமாபந்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், அரசு சர்வே கற்களைச் சரிபார்க்கவும் நடத்தப்பட்ட இந்த ஜமாபந்தியில், வரலாற்றுச் சின்னம் உடைக்கப்பட்டது குறித்துப் பரபரப்பான புகார் மனு ஒன்று அளிக்கப் பட்டுள்ளது.*வரலாற்றுச் சின்னம் உடைப்பு:*
பணகுடியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் பாலசுப்பிரமணியன் அளித்துள்ள அந்த மனுவில், ராதாபுரம் அருகே உள்ள உதயத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள 'ஜிடி ஸ்டேஷன்' எனப்படும் ஆங்கிலேயர் காலத்து வரலாற்றுச் சிறப்புமிக்கச் சர்வே கோபுரத்தைச் சில சமூக விரோதிகள் திட்டமிட்டு உடைத்து, அதன் கற்களைக் கடத்திச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், அந்த நிலத்தையும் ஆக்கிரமித்து முள்வேலி அமைத்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.*220 ஆண்டு கால வரலாறு:*கடந்த 1802 ஆம் ஆண்டு ஆங்கிலேய அதிகாரி வில்லியம் லாம்டன் என்பவரால் தமிழ்நாடு முழுக்க முக்கோண வடிவிலான சர்வே செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், மலைகளுக்கு இடையே உள்ள தூரம், உயரம் மற்றும் கடல் மட்டத்திலிருந்து பூமியின் அளவுகளைத் துல்லியமாக அறிந்துகொள்ள இந்தச் சர்வே கோபுரங்கள் அமைக்கப்பட்டன. தற்போது வருவாய்த்துறையின் பராமரிப்பில் இருந்து வரும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோபுரம் உடைக்கப்பட்டு, நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது ராதாபுரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# “500 பேருக்குப் பால், 500 பேருக்கு அன்னதானம், 300 பேருக்கு நோட்டுகள்!” திருப்பூரில் தவெகவின் நற்பணித் திருவிழா!



திருப்பூர், ஜூன்.26-
தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும், கழகத்தின் பொதுச்செயலாளருமான அண்ணன் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின்படி, திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பாலமுருகன் தலைமையில், தமிழக முதலமைச்சரும் தவெக தலைவருமான தளபதி சி. ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழா திருப்பூரில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.
*வாலிபாளையத்தில் குவிந்த நலத்திட்ட உதவிகள்:*பால் விநியோகம் - அன்னதானம்: காலையில் 500 பொதுமக்களுக்குப் பால் வழங்கும் விழாவும், மதிய வேளையில் 500 ஏழை எளிய சாமானிய நபர்களுக்கு அசாத்திய அன்னதானம் வழங்கும் விழாவும் நடத்தப்பட்டது. ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக 300 குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 5 கிலோ பிரம்மாண்ட கேக் வெட்டி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது.
திரண்ட தவெக சிங்கங்கள் :இம்மாபெரும் விழாவினை வாலிபாளையம் பகுதி கழகச் செயலாளர் தளபதி சுபியான், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி இணை ஒருங்கிணைப்பாளர் எஸ். அஸ்வின், பகுதி கழக இணைச் செயலாளர் யோகேஷ், 35வது வார்டு செயலாளர் பாக்கியலட்சுமி மற்றும் பகுதி கழகத் தலைமை செயல் ராகவன் ஆகியோர் முன்னின்று போர்க்கால உத்தியோடு ஒருங்கிணைத்தனர்.
இந்நிகழ்வில் தவெக முக்கிய நிர்வாகிகள் எஸ் டி மனோஜ், ஜான்சன், தமிழரசன், விஸ்வேஸ்வரன், ஸ்ரீதர், ஜியாவுல்லா, தனுஷ், மனோஜ், விஜய், சூர்யா, புஷ்பராஜ், கிறிஸ்டோபர், மோகன், குப்புசாமி உள்ளிட்ட மாவட்ட, நகர, பகுதி கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தவெக சார்பு அணிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# “தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி, மாணவர்களுக்கு நோட்டுகள், 100 பேருக்கு அன்னதானம்!” சுங்காரமடக்கில் தவெக அசுர நற்பணி!

குடிமங்கலம், ஜூன்.26-
தமிழக முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் மேற்கு ஒன்றியம், வடுகபாளையம் பஞ்சாயத்திற்குட்பட்ட சுங்காரமடக்கில் மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.*நலத்திட்ட உதவிகள் - அன்னதானம்:*
திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருமலை மற்றும் மாவட்டப் பொருளாளர் பிரகாஷ் ஆகியோர் தலைமை தாங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். தூய்மைப் பணியாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்கப்பட்டன. கல்வி உபகரணங்கள்: 30க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன.
அன்னதானம் - பசுமை நகர்வு: 100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும், விழாவின் ஒரு பகுதியாக மரக்கன்றுகளும் நடப்பட்டன.
ஒருங்கிணைப்பு:
இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை குடிமங்கலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் காந்தி மற்றும் ஒன்றியத் துணைச் செயலாளர் நாகராஜ் ஆகியோர் முன்னின்று ஒருங்கிணைத்தனர். இந்நிகழ்வில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி (IT WING) நிர்வாகிகள் ஹரி, அஸ்மிதா மற்றும் அனைத்துக் கிளை நிர்வாகிகள், சார்பு அணிப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# தேசிய மனநல திட்டத்தின் சார்பாக போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணி



ஜூன்.26-
இந்த பேரணி நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் அ, இ ஆ ப அவர்கள் கொடியாசைத்து துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் நலத்துறை இயக்குனர் டாக்டர். செவ்வேல் மற்றும் தேசிய மனநல திட்ட அதிகாரி மனநல மருத்துவர் டாக்டர். பாலன் மற்றும் மனநல மருத்துவர் டாக்டர், அரவிந்தன் மனநல மருத்துவர் டாக்டர், மதன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இப்பேரணியில் புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் செவிலியர் கல்லூரியின் 350 மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர், இப்பேரணி முக்கிய வீதிகள் வழியாக பதாகைகள் ஏந்தி கொண்டு போதைப் பழக்கத்தின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியும் வண்ணம் இப்பயனம் நடைபெற்று இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரியினை அடைந்தனர். அங்கு நடைபெற்ற பயிலரங்கத்தில் கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் மனநல மருத்துவர் டாக்டர் அரவிந்தன் போதை பழக்கத்தினால் ஏற்படும் மனநல பாதிப்புகள் பற்றி விரிவாக கூறினார். அதனைத் தொடர்ந்து மனநல மருத்துவர் டாக்டர் மதன் மன அழுத்தம் மற்றும் தற்கொலை தடுப்பு என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இதில் பல்வேறு செவிலியர் கல்லூரி மாணவர்கள் சுமார் 350 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த நிகழ்ச்சியினை மனநல ஆலோசகர் திரு. ராஜா மற்றும் உதவியாளர் திரு. வெற்றிகார்த்தி நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர்



■ விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகே உள்ள கரசானூர் கிராமத்தில் பிரசித்தி பெற்ற திரௌபதி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் வெகு விமர்சியாக நல்லா முறையில் இன்று நடந்து முடிந்தது இதில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட வானூர் காவல் ஆய்வாளர் சக்தி மற்றும் உதவி ஆய்வாளர் திவாகர் அவர்களுக்கு கிராம மக்களும் கிராம பெரியோர்களும் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்



■ உள்ளாட்சித் துறை சார்பில் தலைமை செயலகத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் தொடர்பாக விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற்றது இதில் முதலமைச்சர் ரங்கசாமி அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ VMS Technology Solutions நிறுவனத்தின் புதிய அலுவலக திறப்பு விழாவில் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆ. நமச்சிவாயம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி அலுவலகத்தை திறந்து வைத்தார். மேலும், நிறுவன நிர்வாகிகளுக்கு பூங்கொத்து வழங்கி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்

# இராமநதியில் இருந்து கார் பருவ சாகுபடிக்காக மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தண்ணீர் திறப்பு




தென்காசி, ஜூன்.26-
தென்காசி மாவட்டம் தென்காசி வட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமநதியில் இருந்து கார் பருவ சாகுபடிக்கு இன்று தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது. இதனால் இராமநதி பாசன திட்டத்தின் கீழுள்ள வடகால், தென்கால் மற்றும் பாப்பான்கால் ஆகிய பாசன நிலங்களுக்கு 1008.19 ஏக்கர் பயன்பெறும் வகையில் கார் பருவ சாகுபடிக்கு இராமநதி நீர்த் தேக்கத்திலிருந்து 25.06.2026 முதல் 31.10.2026 வரை 129 நாட்களுக்கு வினாடிக்கு 60 கன அடிக்குக்கு மிகாமலும், கார் பருவ காலத்தில் மொத்தம் 168.03 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விடப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.இந்நிகழ்வில், செயற்பொறியாளர் மணிகண்டராஜன், உதவி செயற்பொறியாளர் குமார், உதவி பொறியாளர் கணபதி மற்றும் அரசு அலுவர்கள், விவசாய பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டி என் புதுகுடி புளியங்குடி தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு முதியோர்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது





தென்காசி, ஜூன்.26-
தென்காசி வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாளையொட்டி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன், அறிவுறித்தலின்படி டி என் புதுக்குடி 32 வது வார்டு 31 வது வார்டு இரண்டு வார்டுகள் சேர்ந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடுகளை செய்துள்ளனர் மேலும் சிறப்பு விருந்தினராக புளியங்குடி தெற்கு நகர செயலாளர் எஸ் வி எம் கண்ணன், தலைமையில் தவெகவினர் பட்டாசுகள் வெடித்து கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.தொடர்ந்து பொருளாதாரத்தில் நலிவடைந்த முதியோர்களுக்கு நலத்திட்ட உதவியாக 10 கிலோ அரிசி 20 நபர்களுக்கு வழங்கினர். மேலும் பள்ளி குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டியாக பாட்டிலில் தண்ணீர் நிரப்புதல் சிலம்பம் சுற்றுதல் பெண்கள் வண்ண வண்ண கோலங்கள் போடுதல் மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கினர்.இதில் மாவட்ட துணைச் செயலாளர் மகேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் நீலாதேவி, ஜான்சன்துரை, இளைஞரணி இணை அமைப்பாளர் சௌந்திரபாண்டியன், நகர நிர்வாகிகள் பாலமுருகன், அசல் குருராஜா, கிறிஸ்டோபர்ராஜா, முருகேஸ்வரி, மாவட்ட நிர்வாகிகள் நகரகிளை, வார்டு நிரவாகிகள் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

திருப்பூர், ஜூன்.26-
தனியார் ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி திருப்பூர் மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணியை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு திரும்பப் பெற வலியுறுத்தியுள்ளனர். மாநகராட்சியின் நேரடி ஊழியர்களாக தூய்மைப் பணியாளர்களை அங்கீகரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்

# 500 மின்சார பேருந்து டெண்டர் ரத்து: தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜூன்.26-
தமிழகத்துக்கு 500 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கான டெண்டரை அரசு ரத்து செய்துள்ளது.தமிழகத்தில் 2025 முதல் மின்சார பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த மின்சார பேருந்துகளை ஒப்பந்த நிறுவனமே கொள்முதல் செய்து, இயக்கி பராமரிக்கும். அதற்கான குறிப்பிட்ட தொகையை ஒப்பந்த நிறுவனத்துக்கு அரசு வழங்கும்.
அதன்பின், சென்னை, மதுரை, கோவையில் பயன்படுத்த 500 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்ய டெண்டர் கோரப் பட்டது. இந்தப் பேருந்துகள் ஜெர்மனி வங்கி நிதியுதவிடன் வாங்க திட்டமிடப்பட்டது.இதுகுறித்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: தற்போதைய சூழலில் பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகங்கள் கொள்முதல் செய்து இயக்குவது நிதி இழப்பை ஏற்படுத்தும். இதுகுறித்து ஜெர்மனி வங்கியிடம் தெரிவிக்கப்பட்டு, தற்போதுள்ள நடைமுறையை பின்பற்ற கோரிக்கை கடிதம் அனுப்பட்டது.இந்த கோரிக்கையை ஏற்று, கடந்த ஜூன் 18ம் தேதி டெண்டர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஜெர்மன் வங்கியும் ஒப்புதல் அளித்தது. இதன் காரணமாகவே டெண்டர் ரத்து செய்யப்பட்டது. விரைவில் டெண்டரில் திருத்தம் செய்து மீண்டும் வெளியிடப்படும். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000